

**கடற்பரப்புகளில் பலத்த காற்று!**

விரிவு பக்கம்:-03

# உதயன்

சுடர் : 41 கதிர் : 194

திங்கட்கிழமை 08 ஜூன் 2026

வைகாசி 25 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

## புதிய சட்டத்தின் ஊடாக மட்டுமே மாகாணத் தேர்தலை நடத்தலாம்!

### நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு

**கொழும்பு, ஜூன் 8**

**நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் புதிய சட்டத்தின் ஊடாக மட்டுமே மாகாணசபைத் தேர்தல்களை நடத்த முடியும் எனச் சட்டமா அதிபர் திணைக்களம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இதனால் மாகாணசபைத் தேர்தல் விரைவாக நடத்தப்படும் சாத்தியங்கள் குறைவு என்று தெரிவிக்கப்படுகின்றது.**

»11

சித்திரவதையைத் தடுக்கும்

## ஐ.நா. உபகுழுப் பிரதிநிதிகள் கண்காணிப்புக்காக வருகை

கொழும்பு, ஜூன் 8
இலங்கையில் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான, சித்திரவதைகளைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் உபகுழுவின் பிரதிநிதிகள் எதிர்வரும் 15ஆம் திகதி வரவுள்ளனர்.
உறுப்புநாடுகளில் சித்திரவதைகள் இடம்பெறு

»11

## யாழ். போதனாவில் குருதிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவில் தற்போது மீண்டும் அனைத்து வகைக் குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா

»09



## வனவள வட்டார அதிகாரி கிணற்றில் சடலமாக மீட்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 8
ஜெயபுரத்தில் காணாமல் போயிருந்த வனவள வட்டார அதிகாரி பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
அநுராதபுரம், தம்புத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 41வயதுடைய ஆராட்சி பண்

»10

## செம்மணி மனிதப்புதைகுழியில் 6 என்புக்கூடுகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
செம்மணி மனிதப்புதைகுழியில் நேற்று 6 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டதுடன், 8 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன.
செம்மணி மனிதப்புதைகுழியின் மூன்றாம் கட்டத்

»11

பாடகரை விடுவிக்குமாறு

## போராட்டம் நடத்தக்கூடாது; மிரட்டுகின்றது பொலிஸ்!

யாழ்ப்பாணம், ஜூன் 8
சொல்லிசைக் கலைஞர் சங்கீதனின் கைதைக் கண்டித்து வல்வெட்டித்துறையில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
வல்வெட்டித்துறை நகரில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கவனவீர்ப்புப் போராட்டம்

»10

## மாயமான மீனவர்கள் பாதுகாப்பாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8
கடலுக்குச் சென்று காணாமல் போயிருந்த புங்குடுதீவைச் சேர்ந்த மூன்று மீனவர்களும்

»11

## கோயில் பூசை முரண்பாட்டால் குடும்பஸ்தர் குத்திக் கொலை!

### தாயாரும் படுகாயம் வவுனியாவில் விபரீதம்



வவுனியா, ஜூன் 8
ஓமந்தை, நாவற்குளத்தில் கோயில் பூசை தொடர்பான முரண்பாட்டில் 32 வயதுடைய இளம் குடும்பஸ்தர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
அவரது தாய் பலத்த காயங்களுக்கு உள்ளாகி

»10





## 230 கிலோ கஞ்சா அச்சுவேலியில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8
அச்சுவேலி, வளலாய் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 230 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.
இராணுவப்புலனாய்வுத்துறையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்

»10

## போக்குவரத்தைக் கட்டுப்படுத்த தனியார் பஸ் சங்கம் தீர்மானம்

### கட்டணத் திருத்தத்துக்குத் தீர்வு வழங்கப்படாததால் நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 8
பொதுப் போக்குவரத்துச் சேவைகளைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.
எரிபொருள் விலை உயர்வுக்கு இணங்கக் கோரப்பட்ட பஸ் கட்டணத் திருத்தத்துக்கு உரிய தீர்வு வழங்

»11

புரச்சந்தி புராணி

"இப்பிடியே சட்டம் பட்டம் எண்டு இன்னும் நாலைஞ்சு வருசம் இழுத்தடிக்கிறது உறுதி கண்டியளோ"

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 07.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4453 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 32 61 69 79 |
| விசேட எழுத்து | M |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 07.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1520 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 21 24 37 47 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 07.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0479 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 3 6 9 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 07.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2559 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 23 47 70 71 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 07.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6211 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 8 8 0 5 8 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 07.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2241 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 28 31 63 82 |
| விசேட எழுத்து | H |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 07.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0327 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 22 47 |

# மாகாணசபைத் தேர்தலுக்கு அஞ்சும் கோழைத்தன அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு!

**கொழும்பு, ஜூன் 8**

**இன்று நாட்டில் மக்கள் மத்தியில் செல்வதற்கு அச்சப்படும் ஒரு ஜனாதிபதியும், கோழைத்தனமான, வினைத்திறனற்ற அரசாங்கமுமே ஆட்சியில் உள்ளது. தங்களின் இந்தக் கோழைத்தனத்தை மாகாணசபைத் தேர்தலை நடத்த தயக்கம் காட்டுவதன் மூலம் அரசாங்கம் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுத் தேர்தலைத் தொடர்ந்து நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆட்சிக்கு வந்து மிகக் குறுகிய காலத்திற்குள் தற்போதைய அரசாங்கம் சுமார் 23 இலட்சம் வாக்குகளை இழந்தது.

இப்போது மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் மேலும் பல இலட்சம் வாக்குகள் பறிபோகும் என்ற பலத்த அச்சத்திலேயே அரசாங்கம் தேர்தலை ஒத்தி வைக்கும் நடவடிக்கைகளைச் செய்து வருகின்றது.

மக்களை ஏமாற்றிய இந்த அரசாங்கத்தால் தற்சமயம் மக்கள் மத்தியில் சென்று தேர்தலை எதிர்கொள்ளும் துணிச்சல் இல்லை.

மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டிய இந்தத் தருணத்தில், நாட்டு மக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள துயரம், அழுத்தம், வலி மற்றும் வருத்தத்திற்குத் தங்களின் வாக்குகள் மூலம் அநுர அரசுக்குத் தக்க பாடம் புகட்டத் தயாராகவே காத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளைத் தற்போதைய அரசு முற்றாக மறந்துவிட்டது. மாகாணசபை தேர்தலை உடனடியாக நடத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க, ஐக்கிய மக்கள் சக்தியால் 'தேசிய நடவடிக்கைக் குழு' ஒன்று ஸ்தாபிக்கப்படும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 07.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | 0919 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| E | 2 1 5 2 1 1 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 07.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3185 | A | 03 37 57 59 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 30 72 75 77 | 5346 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 07.06.2026 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 1015 | 08 18 22 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 01 03 41 48 | 4897 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 07.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 15 | 48 55 56 71 | 2361 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.06.2026 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 01 22 45 49 | 3011 |

# பாடல் பாடினால் பயங்கரவாதியா?

## சாணக்கியன் எம்.பி. கேள்வி

மட்டக்களப்பு, ஜூன் 8

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இலட்சியப் பாடல் ஒன்றைப் பாடியமைக்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சம்பவம் கண்டிக்கத்தக்கது என்று தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தினர் கடந்த காலங்களில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கவேண்டும் என வலியுறுத்தி எங்களுடன் இணைந்து கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இன்று அதே சட்டம் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் வகையில் பயன்படுத்தப்படுவது கவலைக்குரிய விடயமாகும். ஒரு பாடலுக்காக ஒருவரைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைப்பது ஜனநாயக நாட்டில் ஏற்றுக்கொள்ளமுடியாத செயற்பாடாகும்- என்றார். (ச-இ)

# நடந்து சென்ற பெண்கள் எமனானது கார்!

கொழும்பு, ஜூன் 8

ஹங்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எம்புல்கம பனாகொட வீதியில் நேற்று முன்தினம் கார்ஒன்று மோதியதில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த வீதியில் கார் ஒன்று, அதே திசையில் வீதியின் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த இரண்டு பெண்கள் மீது மோதியுள்ளது. விபத்தை ஏற்படுத்திய கார் நிறுத்தப்படாமல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்கள் 42 மற்றும் 44 வயதுடையவர்களாவர்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், கார்ச் சாரதியை கைதுசெய்துள்ளனர். விபத்து நடந்த தருணத்தில் ஓட்டுநர் மதுஅருந்தியிருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

# இலங்கைப் பட்டதாரிகளுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்பு

கொழும்பு,ஜூன் 8

இலங்கையின் கடற்றொழில்துறை பட்டதாரிகளுக்கு, ஜப்பானில் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு, ஜப்பானிய அரசாங்கத்துடன் விசேட உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் , ஜப்பானின் விவசாயம், வனவியல் மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் நெமோட்டோ யுகினோரிடம், கொள்கை ரீதியிலான விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதுதொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கையின் கடல் உணவு பெறுமதிச் சங்கிலியை மேம்படுத்துதல், ஜப்பானியச் சந்தையில் இலங்கையின் கடல் உணவுகளுக்கான தேவையை மேலும் அதிகரித்தல், இலங்கைப் பல்கலைக்கழகங்களின் மீன்வளம், கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பீடங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு, ஜப்பானின் மீன்பிடித் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்புகளை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அதற்கமைவாக எதிர்காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை சார்ந்த பிரிவுகள் மற்றும் தூதரகம் ஊடாக ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது-என்றுள்ளது. (க-26)

### திறைசேரி நிதி மோசடி

# நிதியமைச்சு செயலரை கோப் குழு அழைப்பு

கொழும்பு, ஜூன் 8

திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மோசடியாக மாற்றப்பட்டது தொடர்பான விசாரணைகளை அரசாங்க நிதி பற்றிய குழு தீவிரப்படுத்தியுள்ளது. இதுகுறித்து நிதி அமைச்சு சமர்ப்பித்துள்ள 100 பக்கங்கள் கொண்ட விரிவான அறிக்கையை மதிப்பாய்வு செய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான இந்தக்குழு, நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் இணைந்து இந்த நிதி முறைகேடு குறித்து நாடாளுமன்ற வளாகத்தில் விரிவாக ஆராய்ந்து வருகின்றது.

அதேநேரத்தில், இந்த விவகாரம் தொடர்பாக சுமார் 42 நபர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போன இந்தப் பொது நிதியை மீட்பதற்கான சட்ட மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தற்போது ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பூச்சிக்கொல்லி பயன்பாடு அழிந்துவரும் தேனீக்கள்

## விவசாயிகள் பாதிப்பு!

**கொழும்பு, ஜூன் 8**

**இலங்கையில் தேனீக்கள் மற்றும் மகரந்தச் சேர்க்கை செய்யும் பூச்சியினங்களின் எண்ணிக்கை வேகமாக குறைந்து வருவதன் காரணமாக, உணவு உற்பத்திக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன் விவசாயிகளின் செலவும் பன்மடங்கு அதிகரித்துள்ளதாக விவசாய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

விவசாயத் திணைக்களத்தின் தரவுகளின்படி, தேனீக்கள் மூலமான மகரந்தச் சேர்க்கையானது பயிர் விளைச்சலை 20% முதல் 70% வரை அதிகரிக்கக்கூடியது. எனினும், நவீன விவசாய முறைகள், வாழ்விட அழிப்பு மற்றும் மிதமிஞ்சிய இரசாயனப் பூச்சிக்கொல்லிப் பயன்பாடு ஆகியவற்றால் தேனீக்கள் தற்போது பெரும் அழிவைச் சந்தித்து வருகின்றன. மகரந்தச் சேர்க்கைக்கு ஏற்படும் தீங்குகளைப் பொருட்படுத்தாமல், அதிக விளைச்சலை பெறும் நோக்கில் பல விவசாயிகள் அதிக நச்சுத்தன்மை கொண்ட இரசாயன பூச்சிக்கொல்லிகளையும் உரங்களையும் பயன்படுத்துகின்றனர். தேனீக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதால், இலங்கை விவசாயிகளுக்கு ஏற்கனவே கூடுதல் பொருளாதாரச் சுமைகள் ஏற்பட்டுள்ளதுடன் இயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்யும் உயிரினங்கள்குறைவடைந்துள்ளன.இதனால் விவசாயிகள் கையால் மகரந்தச் சேர்க்கை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இது தொழிலாளர் கூலிச்செலவுகளைக் கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால், தேனீக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத 'தேனீ தோழமை' விவசாய முறைகளைக் கையாளுமாறு விவசாயத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச-இ)



## கடற்பரப்புகளில் பலத்த காற்று!

கொழும்பு, ஜூன் 8

காங்கேசன்துறை முதல் கல்பிட்டி வரையான கடற்பகுதிகளில் மறு அறிவித்தல்வரும் வரை கடற் பயணங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. காங்கேசன்துறை முதல் மன்னார் ஊடாக கல்பிட்டி வரையான கடலோரத்துக்கு அப்பாலுள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதால், அவ்வேளைகளில் இக் கடற்பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும். இதன் காரணமாக மறுஅறிவித்தல் வரும் வரை கடற்பயணங்களை மேற்கொள்ளவேண்டாம் என்று வளிமண்டலவியல்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

## அடிக்கடி வெளிநாட்டுப் பயணம் அரச அதிகாரிகளுக்குக் கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 8

அரசாங்க அதிகாரிகள் அடிக்கடி வெளிநாடு செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபயரத்ன தெரிவித்துள்ளார். அதன் பிரகாரம், மிகவும் அவசரமான மற்றும் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களைத் தவிர, அரசாங்க ஊழியர்கள் தொடர்ந்து வெளிநாடு செல்ல அனுமதி வழங்க வேண்டாம் என்று அனைத்து நிறுவனத் தலைவர்களுக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார். சில நிறுவனத் தலைவர்கள் தங்களின் நெருங்கிய கூட்டாளிகளுக்கு மட்டுமே தொடர்ந்து வெளிநாட்டுப் பயண வாய்ப்புகளை வழங்கி வருகின்றனர் என தகவல் கிடைத்துள்ள நிலையைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வாகனங்கள் இறக்குமதி கட்டுப்படுத்தப்படவில்லை

கொழும்பு, ஜூன் 8

நாட்டுக்குள் வாகனங்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்படவில்லை என்று சுங்கத்திணைக்களத்தின் சிரேஷ்ட பணிப்பாளரும், சுங்கத்திணைக்கள ஊடகப் பேச்சாளருமான சந்தன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். அமெரிக்க டொலரின் மதிப்பு உயர்வால் ஏற்படும் பொருளாதார அழுத்தத்தைக் குறைக்கும் நோக்கில் வரித் திருத்தம் செய்யப்பட்டிருந்தாலும், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

**கதிர்காமக் கந்தன்**

## ஆடிவேல் விழாவுக்கு காட்டுப்பாதை திறப்பு

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக்கந்தனின் ஆடிவேல்விழாவை முன்னிட்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி காட்டுப் பாதை திறக்கப்படவுள்ளது. கதிர்காமக்கந்தன் ஆலயத்தில் கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் விழா மற்றும் பாதயாத்திரை சம்பந்தமான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழா எதிர்வரும் ஜூலை மாதம்15 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இதனையொட்டி அடுத்த மாதம்10 ஆம் திகதி காட்டுப் பாதை திறக்கப்பட்டு அடுத்த மாதம் 25 ஆம் திகதி காட்டுப்பாதையை மீண்டும் மூடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## ஏன் இவ்வளவு காசு?

கள்ளனுக்குத் தேள் கொட்டினால் கத்தவும் முடியாது, தேள் கடிச்சிட்டுது எண்டு அக்கம் பக்கத்தில இருக்கிறவைக்குச் சொல்லவும் முடியாது. அப்பிடிப்பட்ட நிலைமையில தான் வவுனியாவில சில நகைக்கடைக்காரர் இருக்கினமாம். கிட்டடியில வவுனியாவில 10 கோடிரூபா காசோட ஒருத்தர் எஸ்கேப் ஆகிட்டார் எண்ட செய்தியை அநேகமானவை அறிஞ்சிருப்பியள். அவரிட்ட தங்கட காசு 10 கோடிக்குக் கிட்ட இருந்ததெண்டும், அதை அவர் கொண்டு போட்டார் எண்டும் சில நகைக்கடைக்காரர் பொலிஸில முறைப்பாடு குடுத்த பிறகுதான் இந்த விசயம் வெளியில வந்தது. ஆனால் இவையள் ஏன் அவரிட்ட அவ்வளவு பெருந் தொகையாகக் காசு குடுத்து வைச்சிருந்தவை எண்டு ஒருத்தரும் மூச்சு விடேலை. ஏனெண்டால் அதைச் சொன்னால் அவை இவ்வளவு நாளும் செய்த திருகுதாளங்கள் வெளியால வந்திடும். அதால 'நம்பிக்கை அடிப்படையில அவரிட்ட குடுத்து வைச்சிருந்த காசை ஆட்டையைப் போட்டிட்டார்' எண்டு மட்டும் சொல்லியிருக்கினம்.

இவையள் ஏன் கையில இருக்கிற காசை வங்கியில போடாமல் ஏன் தனிப்பட்ட ஆளிட்ட குடுத்து வைக்க வேணும்? அங்கையே எல்லாருக்கும் ஒரு டவுட் வரும். அப்பிடிக் காசை இந்த நகைக்கடைக்காரர் ஒண்டும் சும்மா குடுத்து வைக்கேலை. பொதுவாக வங்கியளிலை நகையளை அடகு வைக்கிற கனபேர் அதைத் திரும்ப எடுக்காமல் விட்டிடுவினம். அப்பிடி வட்டியும் கட்டாமல், வங்கி அனுப்பின கடிதங்களுக்கு மறுமொழியும் சொல்லாமல் கனகாலமா இருக்கிற நகையளை ஏலம் போடுறது வழமை. அப்பிடி ஏலம் போடுற நகையளை வாங்கிறதுக்கு நகைக்கடைக்காரர் சில தனிப்பட்ட ஆக்களை வைச்சிருப்பினம். ஏனெண்டால் உந்த ஏலத்தோட மினக்கெட அவைக்கு நேரம் இருக்கிறேலை. அதோட நகைக்கடைக்காரர் ஏல நகையை வாங்கிறது எல்லாருக்கும் தெரிஞ்சால், ஏல நகையை பொலிஷ் பண்ணிப்போட்டு புது நகை மாதிரி மின்னப்பண்ணிப்போட்டு 'இப்ப தான் சிங்கப்பூரால வந்தது' எண்டு சொல்லி சனத்தின்ர தலையில மிளகாய் அரைக்கேலாது. அதால தான் இப்பிடிப்பட்ட தனியாக்களிட்ட காசைக் குடுத்து வைச்சு, ஏல நகையளை வாங்குவினம். அப்பிடி நகையை வாங்கிக் குடுக்கிறவருக்கு நல்ல கொமிசன் குடுப்பினம். அப்பிடித்தான் உந்த வவுனியாக்காரரிட்ட நகைக்கடைக்காரர் சிலர் காசைக் குடுத்து வைச்சிருக்கினம்.

அவரும்சாதாரண ஆள் மாதிரிவங்கியளின்ர ஏலத்துக்குப் போய், அங்க நல்ல நகையளை ஏலத்தில வாங்கிக் கொண்டந்து அதில இப்பவும் 'ரன்னிங்கில' இருக்கிற பஷனான நகையளை பொலிஷ் பண்ணிப்போட்டு நகைக் கடையளுக்கு குடுப்பார்.அவையளும் அதை செய்கூலி, சேதாரம் எண்டு இன்னொரு மடங்கு காசை வைச்சு விப் பினம். இப்ப ஓட்டமில்லாத டிசைனுள்ள நகையளையும், சேதமடைஞ்ச நகையளையும் இந்த வவுனியாக்காரர் உருக்கி, அதில உள்ள செப்பைத் தனியாக்கி, தங் கத்தை மட்டும் எடுத்து தங்க பிஸ்கட் ஆக்கிக் குடுப்பாராம். இந்த பிஸ்னஸ் தான் இவ்வளவு காலமும் கொடிகட்டிப் பறந்திருக்கு. ஆட்டையைப் போட்டவரின்ர உண்மையான குணம் தெரியாமல், நம்பிக்கையான ஆள் எண்டு நினைச்சு கடைக்காரரும் காசை கண்ணைமூடிக்கொண்டு குடுத்திருக்கினம். உண்மையில அந்தாள் ஆட்டையைப் போட்டது 20 கோடிக்கும் மேல இருக்கும் எண்டு சொல்லுப்படுகுது. ஆனால் அவ்வளவு காசைக் குடுத்ததெண்டால், 'என்னத் துக்குக் குடுத்தனீங்கள்? அப்ப ஏதோ சட்டவிரோதமா உழைச் சிருக்கிறீங்கள்?'எண்டு கேஸ் தங்கட பக்கம் திரும்பக் கூடாதெண்டுதான், இப்பிடிக் காசைக் குறைச்சு முறைப்பாடு செய்திருக்கினமாம். காசோட போனவர் இப்ப சிங்கப்பூரில இருக்கிறாராம். ஆள் திரும்பி வரேக்க எயார்போட்டில வைச்சே பிடிக்க எல்லா ஏற்பாடும் ரெடியாம். பாப்பம், ஆள் பிடிபடுமோ இல்லாட்டி எல்லாருக்கும் அல்வா குடுத்திட்டு எங்கையாவது கம்பி நீட்டுறாரோ எண்டு!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 12 . 1989 | 06 . 06 . 2026 |



## திருமதி சோபனா டினேஷ்குமார்

சாவகச்சேரி, மீசாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோபனா டினேஷ்குமார் (முகாமைத்துவ உதவியாளர்) அவர்கள் கடந்த (06.06.2026) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் சண்முகலிங்கம் - யோகராஜமலர் தம்பதியரின் அன்பு மகளும், சதாசிவமூர்த்தி - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், டினேஷ்குமாரின் (பொறியியலாளர் - தெகிவளை/ கல்கிசை, மாநகரசபை) பாசம் நிறைந்த துணைவியும், பிரணவ், ஆரத்யாவின் உயிர் கலந்த அன்னையும், தீபா (பிரான்ஸ்), கபிலன் (லண்டன்), ரூபா (லண்டன்), நிஷாந்தி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், குமுதினி (சிட்னி), குணாளினி (லண்டன்), நந்தீசன் (கொழும்பு), உதயணன் (சிட்னி), பகீரதன் (பிரான்ஸ்), பத்மறாஜி, கேதீஸ்வரநாதன், ஐங்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புள்ள மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.06.2026) செவ்வாய்க்கிழமை மு.ப 09:00 மணிமுதல் பொரளை ஜயவர்த்தன பார்லரில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CR/47658) J-1

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | உதிர்வு |
|---|---|
| 08 . 08 . 1951 | 11 . 06 . 2023 |



## திருமதி பரமேஸ்வரி ஆறுமுகானந்தன்

திதி: அட்டமி 08.06.2026 (திங்கட்கிழமை)

அன்பிலே தெய்வமாய்!
அறிவிலே ஆசானாய்!
பண்புடனே எமை வளர்த்து
பாசத்தை எமக்களித்து
உயர் நிலையில் வாழவைத்த தாயே!
மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தது அம்மா!
மூன்று ஆண்டுகளல்ல நெஞ்சிருக்கும் வரைக்கும்
நாம் மறவோம் என்றும்
உங்கள் நினைவுடன் வாழ்வோம்.

சிவ கமலகம்
சிவசத்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

CS 27003 (AK.1)

# மரண அறிவித்தல்

## பரராசலிங்கம் குலம்

காரைநகர் களபூமி பாலாவோடை சேர்ந்த லண்டனைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட பரராசலிங்கம் குலம் அவர்கள் கடந்த (06.06.2026) சனிக்கிழமை மாலை 8.30 மணிக்கு லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் K V குரைத்தினம் கனகம்மா அவர்களின் பேரனும், K K விஸ்வலிங்கம் தெய்வானை அவர்களின் பூட்டனும், சிவபாலாநாதன், இந்திராணியின் பேரனும், பரராசலிங்கம் - கவிதா தம்பதியரின் அன்புள்ள மூத்த மகனும், சாயிஸ்வரி, சாயிறுபிணியின் அன்புள்ள அண்ணனும், சதானந்தலிங்கம், சத்தியபாமா, சர்வானந்தலிங்கம், தவயேகேஸ்வரி, ஆனந், தர்சினி ஆகியேரின் பெறாமகனும், விக்கினேஸ்வரன், டேவநாயகி, தவராசா, குலதேவி ஆகியேரின் மருமகனும், சாயினி, சிவசத்தி சிவகுமார், ஐங்கரன் ஆகியோரின் மைத்துனரும், மலாதி, திவ்வியா, சத்தியா, கனகா, மேனகா ஆகியோரின் உடன்பிறவாத தம்பியும், சாய்யிசன், லிங்காவின் உடன்பிறவாத அண்ணனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்




தொடர்புகளுக்கு:-
சதா (UK) - 0044 780 260 9996 - பெரியப்பா
சர்வா (UK) - 0044 788 672 4730 - பெரியப்பா
பரா (UK) - 0044 794 091 9177 - அப்பா

தகவல்:
குடும்பத்தினர்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10.10.2008 | 06.06.2026 |

(CS/31952) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## முதுசொம்களின் பாதுகாப்பு...!

இலங்கையில் உரிய தரநிலைக்கு அமையச் செயற்படாத முதியோர் இல்லங்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே. தென்னிலங்கையில் உள்ள முதியோர் இல்லமொன்றில் அண்மையில் ஏற்பட்ட தீவிபத்தில் 12 முதியவர்கள் உடல் கருகி உயிரிழந்தனர். ஒட்டுமொத்த நாட்டையும் உறையவைக்கும் இந்த அசம்பாவத்தின் பின்னரே, முதியோர் இல்லங்கள் தரச்சோதனைக்கு உட்படும் என்ற அறிவிப்பை அமைச்சர் பன்னிலகே விடுத்துள்ளார். அவ்வாறெனில் ஏன் இவ்வளவு காலமும் அத்தகைய தரச்சோதனைகள் இடம்பெறவில்லை? அவ்வாறான பொறிமுறைகள் நாட்டில் உள்ளனவா? என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதவையாக அமைகின்றன.


முதியோர் இல்லங்களின் பாதுகாப்பு என்பது அவ்வளவு இலகுவில் புறமொதுக்கக்கூடிய விடயமல்ல. சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்தத் துறை வருவதால், தென்னிலங்கையில் உள்ள குறித்த முதியோர் இல்லத்தில் நடைபெற்ற அசம்பாவிதத்துக்கு முழுப் பொறுப்பு உள்ளவராக அமைச்சர் பன்னிலகே அமைகின்றார். நிலைமை இவ்வாறிருக்கையில், 'எதிர்காலத்தில் முதியோர் இல்லங்கள் கண்காணிக்கப்படும்' என்ற ஒற்றை வார்த்தையுடன் அவர் இந்த விடயத்தைக் கடந்துசெல்லக்கூடாது. அதை அனுமதிக்கவும் முடியாது. ஆக, குறித்த முதியோர் இல்லத்தின் மேலாளர் கைதுசெய்யப்பட்டதுடன் முற்றுப்புள்ளி வைக்கும் விடயம் இதுவல்ல என்பதே இங்கு விவாதப்புள்ளி.

இலங்கையில் நாடளாவிய ரீதியில் உரிய தர நிர்ணயங்கள் பின்பற்றப்படாமல் ஏராளமான முதியோர் இல்லங்கள் செயற்பட்டு வருகின்றன. இந்தக்குற்றச்சாட்டு இன்று நேற்றல்ல, பல தசாப்தங்களாக முன்வைக்கப்பட்டு வருகிறது. எனவே, முதியோரின் நல்வாழ்வுடன் தொடர்புடைய இந்த விடயத்தில் திசைகாட்டி அரசாங்கம் மிக விரைவாகச் செயற்படவேண்டியது அவசியமாகும். அத்துடன், ஓர் அசம்பாவம் நடைபெற்ற பின்னர்தான் அந்த விடயம் தொடர்பில் விழித்துக்கொள்ளும் சபிக்கப்பட்ட போக்கு இந்தத் தீவில் மிகஆழமாக வேரூன்றியுள்ளது. அதற்கு இனியாவது முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். ஏனெனில், வந்தபின் விசாரிப்பதைவிட, வருமுன் தவிர்ப்பதே அரசுக்கும் அழகு, நாட்டுக்கும் நல்லது.

இலங்கையில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என அண்மையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் அறிக்கையிட்டுள்ளது. 2012ஆம் ஆண்டளவில் நாட்டின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 12 வீதமாக இருந்த முதியோர்களின் எண்ணிக்கை, தற்போது 18 வீதமாக உயர்ந்துள்ளது. எனவே, முதியோரின் பெருக்கத்தை எதிர்கொள்ளும் நாடு என்ற வகையில் ஜப்பானை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கை செயற்பட வேண்டியதே காலத்தின் தேவை.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



### பொய்யாமொழி

**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து**

**பொருள்:** ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவறாமல் காத்துக் கொள்வர்.




## புற்றுநோயாளிகளின் மருந்துகள் தட்டுப்பாடு

*நோயாளிகள் அவதி*

**கொழும்பு, ஜூன் 8**

**நியூபோஜென் எஸ்.சி' உள்ளிட்ட பல புற்றுநோய் மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் புற்றுநோயாளிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் தொழிற்சங்கக் கூட்டணியின் தலைவரும் மருத்துவருமான சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில காலமாக அரசாங்க மருத்துவமனைகளில் புற்றுநோய் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. மருத்துவமனைகளில் மருந்துப் பற்றாக்குறையைப் பயன்படுத்தி, பதிவுசெய்யப்படாத புற்றுநோய் மருந்துகளை மிக அதிக விலைக்கு விற்க ஒரு கும்பல் நாட்டில் செயற்பட்டு வருகின்றது. தற்போதைய பொருளாதாரச் சூழலில், இந்தச் செலவு நோயாளிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் முற்றிலும் தாங்கமுடியாதது. வெளி மருந்தகங்களிலிருந்து வாங்கப்பட்ட பதிவு செய்யப்படாத மருந்துகளின் தரம் குறித்தும் கடுமையான கேள்விகள் எழுந்துள்ளன.

தற்போது, சந்தையில் பல மருந்துகளின் விலைகள் வேகமாக அதிகரித்து வருகின்றன. இந்த நிலைமை புற்றுநோய் மருந்துகளையும் நேரடியாகப் பாதித்துள்ளது. எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக நீண்டகால மருத்துவச் சிகிச்சை பெற்றுவரும் அத்தகைய ஆதரவற்ற நோயாளிகளுக்காக ஒரு சிறப்பு நிவாரணத் திட்டத்தைச் செயற்படுத்துவது அவசியம் - என்றார். (ச-இ)



## மனைவி தாக்கி கணவன் சாவு!

கொழும்பு, ஜூன் 8

ஹொரணை, அரம்பகந்த பகுதியில் மனைவி ஒருவரால் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு கணவன் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் 49 வயதுடைய நபராவார்.

குறித்த நபருக்கும் அவரது மனைவிக்கும் இடையே வீட்டில் ஏற்பட்ட தகராறின் போது, மனைவி கூர்மையான ஆயுதத்தால் தாக்கி இந்தக் கொலையைச் செய்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹொரணை பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## நீரில் மூழ்கி மூவர் சாவு!

கொழும்பு, ஜூன் 8

நுரைச்சோலை, தழுவ முகத்துவாரப் பகுதியில் நேற்றுமுன்தினம் நீராடச் சென்ற மூன்று பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். 18 மற்றும் 19 வயதுடைய இரண்டு இளம் பெண்களும், 24 வயதுடைய இளைஞர் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த மூவரும் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

## ஐ.ம.ச. உறுப்பினர்கள் ஐவர் பதவிநீக்கம்!

புலத்சிங்கள பிரதேசசபையில் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்திய 5 உறுப்பினர்களை அவர்களது பதவிகளிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது. தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்து இந்த உறுப்பினர்கள் பணம் பெற்றுக் கொண்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ச-இ)



## 3,000 போதைமாத்திரைகளுடன் மருந்தகப் பணியாளர் கைது

காலியில் சுமார் 3,000 போதை மாத்திரைகள் மற்றும் 1,25,000 ரொக்கப் பணத்துடன் தனியார் மருந்தகத்தில் பணிபுரியும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஒரு வீட்டில் சட்டவிரோத மருந்துப் பொருள்கள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், காலி பொலிஸாரின் ஊழல் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)


**நாளை** செவ்வாய்க்கிழமை- வைகாசி 26
09.06.2026

சுபநேரம் : 10.22 – 11.52
ராகுகாலம் : 02.52 – 04.22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### திருநெல்வேலிச் சந்தையில்

# நுகர்வோர் விலைகளை அறிய சந்தைக்குள் டிஜிற்றல் திரைகள்



**யாழ்ப்பாணம்,ஜூன் 8**

**திருநெல்வேலிப் பொதுச்சந்தையின் கண்காணிப்பு மற்றும் சந்தைக்குள் சில நவீன கணினித் தொழில்நுட்பங்களைப் புகுத்தும் புதிய செயற்றிட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நல்லூர்ப் பிரதேச சபைத் தவிசாளர் பத்மநாதன் மயூர னின் விசேட வழிகாட்டலின்கீழ் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.**

அதற்கமைய பொதுச்சந்தைக்கு வருகைதரும் நுகர்வோர்கள் எவ்வித சிரமமுமின்றி அன்றாட மரக்கறி விலை மற்றும் சபை சார்ந்த முக்கிய மான அறிவித்தல்களை மிக இலகு வாக அறிந்துகொள்ளும் முகமாகச் சந்தைப் பகுதிக்குள் அதிநவீன டிஜிற் றல் காட்சித் திரைகளைப் பொருத்து கின்ற பணிகளைத் தற்போது நல் லூர்ப் பிரதேசசபையினர் முன்னெ டுத்துவருகின்றனர். காட்சித் திரைகள் பொருத்தும் பணிகள் முழுமையாக நிறைவடைந்த பின்னர், தினமும் அதிகாலை வேளையில் அன்றைய தினத்துக்குரிய மரக்கறி விலை நுகர்வோரின் பார்வைக்காகத் திரை களில் தெளிவாகக் காட்சிப்படுத்தப் படும்.

சந்தை நிலைவரங்களின்படி மரக்கறி விலைகளில் அவ்வப்போது ஏற்படு கின்ற திடீர் மாற்றங்கள் அனைத்தும், நல்லூர்ப் பிரதேசசபையின் தலைமை அலுவலகக் கட்டுப்பாட் டின்கீழ் இருந்தவாறே, சந்தைப் பகு திக்குள் பொருத்தப்பட்டுள்ள காட்சித் திரைகளில் உடனுக்குடன் மாற்றிய மைக்கப்படும்.

இந்த நவீன தொழில்நுட்ப மாற்றத் தின் மூலமாகச் சந்தைக்குவரும் நுகர்வோர்கள் வியாபாரிகளினால் ஏமாற்றப்படுவது தவிர்க்கப்படுவது டன், நியாயமான விலையில் நுகர் வோர் தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ச-66)

## யாழ்.பல்கலையில் நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஜூன் 8

இலங்கை பேலியேட்டிவ் பராமரிப்புச் சங்கம் ஏற்பாடுசெய்துள்ள, பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கத்தின் நினைவுப்பேருரை நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத் தில் நடைபெறவுள்ளது. வட பிராந்தியத்தின் புற்றுநோய் மருத்துவத்துறை சார்ந்த வரலாற் றுப் பதிவுகள் மற்றும் அனுபவங்களை மீட்கும் நோக்கில் 'வட பிராந்தியத்தில் முன்னோடி புற்று நோய் சிகிச்சை: ஆரம்பகால அனுபவங்களும் நிலையான பாடங்களும்' எனும் தலைப்பில் நினைவுப்பேருரை அமையவுள்ளது. நிகழ்வில் இலங்கையின் தேசிய புற்றுநோய் நிறுவனத் தின் விசேட புற்றுநோய் மருத்துவ நிபுணரான கலாநிதி நடராஜா ஜெயகுமரன் பேருரையை நிகழ்த்தவுள்ளார். மருத்துவ வல்லுநர்கள், பல் கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது நலன்விரும்பிகள் அனைவரை யும் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச)

## சடலத்தை பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்.போதனா மருத்துவமனை யில் விடுதி இலக்கம் 27இல் கடந்த மாதம் 13ஆம் திகதி சேர்க் கப்பட்டு கடந்த 2ஆம் திகதி இறந்து போன கண்ணன் குணரத்தினம் என்பவரது சடலம் யாரும் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது.

இவர் அரசடி கொக்குவில் மேற்கு கொக்குவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராவார்.

குறித்த சடலத்தினை அடையா ளம் காட்டி பெற்றுக்கொள்ளு மாறு யாழ்.போதனா மருத்துவ மனையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-41)

## லொறி விபத்தில் பெண் உயிரிழப்பு

**12 பேர் காயம்**

கொழும்பு, ஜூன் 8

ஆனமடுவ, முதலக்குலிய பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள் ளதுடன், மேலும் 12 பேர் காயமடைந் துள்ளனர். சிலாபம், முன்னேஸ்வரம் கோவிலுக்கு சிறிய ரக லொறி ஒன்றில் வழிபாட்டுக்காக வந்த குழுவினர், மீண் டும் திரும்பிச் சென்று கொண்டிருந்த போது, லொறி கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள் ளது. லொறி ஓட்டுநருக்கு ஏற்பட்ட தூக் கக் கலக்கமே இந்த விபத்துக்குக் கார ணம் என பொலிஸார் சந்தேகிக்கின்ற னர். (ச-இ)



## நயினை அம்மனில் அற்புத திருக்காட்சி

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆல யத்தின் வருடாந்த மஹோற்சவம் இன் னும் சில நாள்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் நயினாதீவுக் கடற்பரப்பில் அமைந்துள்ள இந்தக் கல்லில் வெள் ளைக் கருடன் வந்து அமர்ந்திருக்கும் அற்புதக் காட்சி நிகழ்ந்துள்ளது. நயினா தீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வரலாற்றுப் பின்னணியில் இந்தக் கரு டன் கல்லுக்கு மிகமுக்கியமான இட முண்டு. ஆலயத்தின் தலபுராணக் கதை யின்படி, நாகப்பாம்பைக் கொல்வதற்கா கக் கருடன் துரத்தி வந்தபோது, அந்த நாகம் இந்தத் தீவில் உள்ள அம்மனைச் சரணடைந்தது. அம்மனின் அருளால் நாகம் காக்கப்பட்ட இடமாகவும், கருடன் தனது பகையை மறந்து அமர்ந்த இடமா கவும் இந்தக் கல் பாரம்பரியமாக நம்பப் பட்டுவருகின்றது. தற்போது அதே கல் லில், கொடியேற்றத் திருவிழாவிற்குச் சரி யாகச் சில நாள்களுக்கு முன்னதாக வெள்ளைக் கருடன் வந்து காட்சி தந்துள் ளதை, அம்மனின் விசேட அருள் அடை யாளம் எனப் பக்தர்கள் பரவசத்துடன் போற்றி வருகின்றனர். (ச-66)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அதிகாரிகளின் சந்திப்பும், அவர்களால் காரிய அனுகூலமும் உண்டாகும். தாயிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவு களும் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குப் புதிய ஆடை, ஆபர ணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனை களை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்று வதற்காக செலவு செய்வீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர் பார்க்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பய ணம் மேற்கொள்ளநேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**விருச்சிகம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு [illegible]

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படு வார்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தடைகளும் தாமதமும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியா பாரத்தில் பணியாளர்களால் வீண் செலவு கள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25 . 03 . 1970

மறைவு
21 . 05 . 2025

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த (21.05.2025) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் திருமதி கேதீஸ்வரன் கௌரி (லலிதா)

**ஆண்டு ஒன்று கடந்தாலும் அன்பு என்றும் மாறவில்லை,**
**அம்மா நீங்கள் தந்த பாசம் இதயத்தில் குறையவில்லை,**
**நினைவுகள் தினம் வந்து கண்களை நனைக்கின்றன,**
**நீங்காத உங்கள் நினைவில் எங்கள் வாழ்வு தொடர்கின்றது...**

அவர்களின் ஆண்டுத்துவச நிகழ்வுகள் நாளை (09.06.2026) செவ்வாய்க் கிழமை மதியம் 12.00 மணியளவில் **கொக்குவில் மஞ்சவனப்பதி மண்டபத்தில்** நடைபெறும். அத்தருணம் தாங்களும் [illegible] குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**பத்தானை வீதி,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**

குடும்பத்தினர்
**வரன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்.**
**077 905 0188** (cs.61608) (N-1)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதன உரிமையை உறுதிப்படுத்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 07 வாரிவனேஸ்வரா, புகையிரத நிலைய ஒழுங்கை சாவகச்சேரி, ஆதன இலக்கம் 15 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஜெயபாலரட்ணம் கோபிராஜ்ᵉம் மனைவி அனுசியாவும் என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. தற்போது இவர்கள் இவ் ஆதனத்தில் கட்டடம் அமைப்பதற்கு அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்திற்கு இளைப்பாறிய பேராயர் இல்லம், மக்ளியோட் வைத்தியசாலை, இணுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெபநேசன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு பொ.பூலோகசிங்கம் அவர்கள் முகதாவில் 1300 இலக்க 03.05.2012 ஆம் திகதியில் "எனது தாய்வழிப் பாட்டனாரின் முதுசம் எனவும் 32 ஆண்டு காலமாக எனது ஆட்சியில் இருப்பதினாலும் இவ்வாதனத்திற்கு நானே உரித்தாளர்" என்றும் வெளிப்படுத்தி உறுதி முடித்துள்ளார்கள்.

பின்னர் இளைப்பாறிய பேராயர் இல்லம், மக்ளியோட் வைத்தியசாலை, இணுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெபநேசன் மற்றும் ஜெபநேசன் பெண் சீத்தா விமலலக்ஸ்மி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு பொ.பூலோகசிங்கம் அவர்கள் முகதாவில் 1363 இலக்க 18.01.2013 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை புகையிரத நிலைய வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த சாமுவேல் ஜெயக்குமார் கிறிஸ்ரியன் கதிர்காமர் மற்றும் சுனித்திரா செல்வகுமாரி கதிர்காமர் ஆகியோருக்கு வழங்கியுள்ளார்கள்.

பின்னர் புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த சாமுவேல் ஜெயக்குமார் கிறிஸ்ரியன் கதிர்காமர் மற்றும் சுனித்திரா செல்வகுமாரி கதிர்காமர் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு பொ.பூலோகசிங்கம் அவர்கள் முகதாவில் 1367 இலக்க 01.03.2013 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை இளைப்பாறிய பேராயர் இல்லம், மக்ளியோட் வைத்தியசாலை, இணுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெபநேசன் மற்றும் ஜெபநேசன் பெண் சீத்தா விமலலக்ஸ்மி ஆகியோருக்கு வழங்கியுள்ளார்கள்.

பின்னர் இளைப்பாறிய பேராயர் இல்லம், மக்ளியோட் வைத்தியசாலை, இணுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெபநேசன் மற்றும் ஜெபநேசன் பெண் சீத்தா விமலலக்ஸ்மி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சுதா கஜேந்திரகுமார் அவர்கள் முகதாவில் 1480 இலக்க 27.01.2016 ஆம் திகதியில் நிறைவேற்றிய அறுதி உறுதி மூலம் இவ் ஆதனத்தை தம்பகாமம், பளையைச் சேர்ந்த ஜெயபாலரட்ணம் கோபிராஜ் மற்றும் பெண் அனுசியா ஆகியோருக்கு வழங்கியுள்ளார்கள்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரி இறை பிரதேச செயலர் பிரிவு - தென்மராட்சி உள்ளூர் அதிகாரசபை - சாவகச்சேரி நகரசபை கிராம சேவகர் பிரிவு- J/306 வட்டாரம் - 07 ஆதனவரி மதிப்பீட்டு இலக்கம் -15 புகையிரத நிலைய வீதி "இராசாதோப்பு" நில.பர 01 குளி 09.46 இது 2012.03.10ந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு.ரி.தங்கராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட 5244ம் இலக்கப்படத்தில் சுட்டிய 1ம் இலக்கத்துண்டு எல்லை

கிழக்கு :- கீதாஞ்சலி ஜெபநேசன் கணேசலிங்கத்தினாதனம்.
வடக்கு :- அரசரட்ணம் பெண் ஜெயசீலியினாதனம்.
மேற்கு :- புகையிதை நிலைய வீதி.
தெற்கு :- செல்லையா கதிரித்தம்பியின் உரிமைக்காரரினாதனம் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளனைத்தும்.

ஜெயபாலரட்ணம் கோபிராஜ்ᵉம் மனைவி அனுசியாவும் இவ் ஆதனத்தில் கட்டடம் அமைப்பதற்காக சமர்ப்பித்த விண்ணப்பத்திற்கு அங்கீகாரம் வழங்குவதில் ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்தில் கட்டடம் அமைப்பதற்கு விண்ணப்பதாரருக்கு அங்கீகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

(cs.61602) (N-1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
25 . 09 . 1950

உதிர்வு
08 . 06 . 2025

## திருமதி ஜெயரட்ணம் நவமணி


ஆனது ஆண்டு ஒன்று
அம்மா நீங்கள் மறைந்து
ஆறவில்லை துயரம்
ஆண்டுகள் கடந்து போகும்
ஆனாலும்
அம்மாவின் இடத்தை மட்டும்
ஆராலும் நிரப்ப முடியாது.

**லோட்டன் வீதி, மானிப்பாய்.**
**08.06.2026**

**குடும்பத்தினர்**

(CS/61597) J-1

# மரண அறிவித்தல்



பிறப்பு
08 . 01 . 1939

இறப்பு
06 . 06 . 2026

## வியாழரத்தினம் தியாகராசா
### (கைதடி நாவற்குழி)

கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை தற்காலிக வதிவிடமாக வும் கொண்ட வியாழரத்தினம் தியாகராசா அவர்கள் 06.06.2026 சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வியாழரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - விசாலாட்சி தம்பதியரின் மருமகனும், ரோகினி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கிருஸ்ணராஜா சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரனும், கருணாகரன் (லண்டன்), கருணசீலி (சுவிஸ்), கருணகலா (ஆசிரியர் - யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை), கர்ணரூபி (நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானேஸ்வரி (லண்டன்), சிவானந்தன் (அதிபர் - யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்), தவானந்தம் (உரிமையாளர் - துவாரகை அரிசி உற்பத்திகள் - நீர்வேலி) ஆகியோரின் மாமனாரும், துவாரகா (வைத்தியர் - சிலாபம் வைத்தியசாலை), யுவராஜ் (பொறியியலாளர்), கினோஜன் (கனடா), சாயினி (கனடா), அபிகிருஸ்னா, அபிநயா, ஜொனந்தன் (சுவிஸ்), அகிஷன் (லண்டன்), அபிநயன் (லண்டன்), அமீரா (லண்டன்) ஆகியோரின் பேரனும், வானகனின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கைதடி நாவற்குழியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மறவன் புலவுவில் உள்ள தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs.61607) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, உள்ளீடுகள் மற்றும் சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள்

**2026.08.01 தொடக்கம் 2027.07.31 வரை**

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணத்தின் கீழுள்ள வைத்தியசாலை களுக்கு உலர் உணவு. உள்ளீடுகள் மற்றும் சமைத்த உணவு வழங்குவதற்குத் தகமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ இல | பெறுகை இலக்கம் | சேவை வழங்கவேண்டிய நிலையம் | பெறுகையின் தன்மை | | தொகை (ரூபா) | காலாவதி திகதி |
|---|---|---|---|---|---|---|
| | | | தொகுதி இல | உலர் உணவுவழங்கல் சேவை | | |
| 01. | NP/04/41/05/Diet – Raw Food /JF/01/2026-2027 | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை | 01 | புதிய மரக்கறிகள் மற்றும் பழவகைகள் | 38,000.00 | 27.10.2026 |
| | | | 02 | இறைச்சி, முட்டை, மீன் மற்றும் கருவாடு வகைகள் | 25,000.00 | 27.10.2026 |
| | | | 03 | உலர் உணவு, பக்கற், போத்தல் மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு வகைகள், பாண், எரிவாயு மற்றும் விறகு | 58,000.00 | 27.10.2026 |
| 02. | NP/04/41/05/Diet – Raw Food /JF/02/2026-2027 | ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி | 01 | புதிய மரக்கறிகள் மற்றும் பழவகைகள் | 31,000.00 | 27.10.2026 |
| | | | 02 | இறைச்சி, முட்டை, மீன் மற்றும் கருவாடு வகைகள் | 16,000.00 | 27.10.2026 |
| | | | 03 | உலர் உணவு, பக்கற், போத்தல் மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு வகைகள், பாண், எரிவாயு மற்றும் விறகு | 41,000.00 | 27.10.2026 |
| 03. | NP/04/41/05/Diet – Raw Food /JF/03/2026-2027 | ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்துறை | உலர் உணவு வழங்கல் சேவை | | 45.000.00 | 27.10.2026 |
| 04 | NP/04/41/05/Diet – Raw Food /JF/04/2026-2027 | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | உலர் உணவு வழங்கல் சேவை | | 22,000.00 | 27.10.2026 |
| 05 | NP/04/41/05/Diet – Raw Food /JF/05/2026-2027 | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | உலர் உணவு வழங்கல் சேவை | | 38,000,00 | 27.10.2026 |
| 06 | NP/04/41/05/Diet – Raw Food /JF/06/2026-2027 | பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி | உலர் உணவு வழங்கல் சேவை | | 15,000.00 | 27.10.2026 |
| 07 | NP/04/41/05/Diet – Raw Food /JF/07/2026-2027 | பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் | உலர் உணவு வழங்கல் சேவை | | 31,000.00 | 27.10.2026 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு. வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடு களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான வர்த்தக அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   இ. அத்துடன். வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் ( Section II Bidding Data Sheet) குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. சுகாதாரக் கிராமம். பண்ணை. யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 08.06.2026 ஆம் திகதி முதல் 30.06.2026 ஆம் திகதி வரை வேலைநாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா 3,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். மேலும் மேலதிக தகவல்களை 0212226253, 0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்வி ஆவணங்கள் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **'கேள்விப் பத்திர மூலம் வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு. உள்ளீடுகள் மற்றும் சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகை விண்ணப்பம் ( வைத்தியசாலையின் பெயர்) - பெறுகை இலக்கம் ..............." எனக் குறிப்பிட்டு 01.07.2026 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **"தலைவர். பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலிலோ அல்லது **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. யாழ்ப்பாணம் அலுவலகத்தி னுள்ள** பெறுகைப் பெட்டியினுள் நேரடியாக இடப்படுவது மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

06. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 17 ஆம் திகதி யூன் மாதம் 2026 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்வி ஆவணத்தின் செல்லுபடியாகும் காலம் 90 நாட்கள் (29.09.2026) ஆகும். கேள்விதாரர்கள் மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பு உத்தரவாதத்தை வழங்க வேண்டும். அட்டவணையிலுள்ள தொ. இல 01 - 02 வரையான ஆதார வைத்திய சாலைகளுக்கு கேள்விதாரர் தொகுதி வாரியாக தனித்தனியேயும். மற்றும் அட்டவணையில் உள்ள தொ. இல 03-07 வரையான ஆதார மற்றும் பிரதேச வைத்திய சாலைகளுக்கு தனியான கேள்வி உத்தரவாத முறி சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி ஆவணத்தில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய கேள்வி உத்தரவாத முறியினையும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எதாவது ஒரு வர்த்தக வங்கியிடமிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அட்டவணையில் குறிப்பிட்டவாறு கேள்வி உத்தரவாத முறியினை வைப்பாக **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. சுகாதாரக் கிராமம். பண்ணை. யாழ்ப்பாணம் எனும் முகவரியில்** பணமாக செலுத்துதல் வேண்டும். கேள்வி பிணை முறியினது காலாவதி திகதி 27.10.2026 ஆகும்.

08. இவ் விலை மனுக்கோரலை எந்தவொரு கட்டத்திலும் முழுமையாகவோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971
மின்னஞ்சல்: rdhsjaffna 15@gmail .com

(CR.47648) N




## மாதாந்த எரிபொருள் இறக்குமதிச் செலவு 521 மில்லியன் டொலராக அதிகரிப்பு!

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

பூகோள யுத்தச் சூழ்நிலை காரணமாக உலகச் சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள்களின் விலைகள் சுமார் 70 சதவீதத்தால் உயர்ந்துள்ளன. இதனால் இலங்கையின் மாதாந்த எரிபொருள் இறக்குமதிச் செலவு 126 மில்லியனிலிருந்து 521 மில்லியன் டொலராக அசுர வேகத்தில் அதிகரித்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலகச்சந்தை விலைஉயர்வு காரணமாக, தற்போதைய உள்நாட்டு விற்பனை விலையின்படி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லீற்றர் ஒன்றுக்கு 358 ரூபாவும், ஆர்.எம். பார்க் நிறுவனம் 346 ரூபாவும், சினோபெக் நிறுவனம் 186 ரூபாவும் நஷ்டத்தை எதிர்கொள்கின்றன. பூகோள யுத்தச் சூழ்நிலை காரணமாக மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள்களின் விலைகள் உலகச் சந்தையில் சுமார் 70 சதவீதத்தால் கணிசமாக உயர்ந்துள்ளன. இந்த உலகச்சந்தை விலை அதிகரிப்புக் காரணமாக, தற்போதைய உள்நாட்டு விற்பனை விலையின்படி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசல் லீற்றர் ஒன்றுக்கு 358 ரூபா நஷ்டத்தை எதிர்கொள்கிறது. ஆர்.எம். பார்க் நிறுவனம் 346 ரூபாவும், சினோபெக் நிறுவனம் 186 ரூபாவும், ஏனைய நிறுவனங்கள் 194 ரூபாவும் டீசலுக்காக நஷ்டத்தைத் எதிர்கொள்கின்றன. இவ்வாறான நஷ்டத்துடனேயே நிறுவனங்களும் கூட்டுத்தாபனமும் தற்போது எரிபொருள்களை விற்பனை செய்கின்றன. அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எரிபொருள் விநியோகத்தைக் குறைக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ இல்லை.

ஒருவேளை இந்த விலை அதிகரிப்பைச் செய்யாவிட்டால், தனியார் நிறுவனங்கள் நஷ்டம் தாங்கமுடியாமல் எரிபொருள் இறக்குமதி செய்வதை நிறுத்திவிடும். இதனால் விநியோகம் முற்றாகப் பாதிக்கப்பட்டு ஒட்டுமொத்தப் பொருளாதாரமும் சீர்குலைந்து விடும் என்பதால் தான் இந்தக் கடின முடிவு எடுக்கப்பட்டது. - என்றார்.

(ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### யாழ். ...

மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த வாரம் நான்கு குருதிக்கொடை முகாம்கள் இரத்தாகியதால், குருதிச்சேகரிப்பு பாதிக்கப்பட்டுள்ளது. குருதிக்கொடையாளர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியின் 12 ஆம் இலக்க நுழைவாயில் ஊடாகத் தினமும் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வந்து குருதிக்கொடை வழங்கி உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-எ-66)



புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தில் சிறுவர் சந்தை அதிபர் பொ.கேதீஸ்வரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ச)

BCAS INTERNATIONAL UNIVERSITY PLACEMENTS
UniWorld

YOUR GLOBAL EDUCATION
JOURNEY STARTS HERE
Explore. Learn. Grow. Succeed.

UK | CANADA | AUSTRALIA | FRANCE | GERMANY

- Meet university representatives
- Exclusive scholarships
- FREE visa guidance
- Pathway programs
- Student loans and easy payment plans
- IELTS guidance

CALL TO REGISTER 077 769 8062
MEET UNIVERSITIES | EXPLORE PROGRAMS | APPLY ON THE SPOT
13 JUNE 2026
09 AM - 4 PM
JETWING JAFFNA
37, Mahatma Gandhi Road, Jaffna
FREE ENTRY




இலங்கையின் சிறந்த நிதி நிறுவனம்
The Global Economics - UK
இப்போது










நெல்லியடி
இல.202, யாழ்ப்பாண வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
021 712 1100

புதுக்குடியிருப்பு
வார்டு எண் 7, முல்லை சாலை,
புதுக்குடியிருப்பு.
021 712 1200

கிளிநொச்சி
இல. 284, A9 வீதி,
கிளிநொச்சி.
021 712 1000

www.vallibelfinance.com

வெலிபல் பைனான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## போராட்டம்...

ஒன்றுஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று வல்வெட்டித்துறை பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், இளைஞர்கள் இணைந்து அழைப்பு விடுத்துள்ளனர். அதேவேளை, கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்துள்ள வல்வெட்டித்துறை சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்களை நேற்று நண்பகல் வல்வெட்டித்துறைப் பொலிஸார் நேரில் அழைத்து விசாரணை மேற்கொண்டதுடன், இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அனுமதி வழங்க முடியாது எனத் தெரிவித்தனர் எனக் கூறப்படுகின்றது. கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டால், அதில் பங்கேற்பவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் எனப் பொலிஸார் மிரட்டினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26-100)

## கோயில்...

யுள்ளார். சேதுபதி நிரோஜன் (வயது-32) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

நாவற்குளம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் கதவை உடைத்து, ஆறு பேர் கொண்ட குழுவொன்று வலுக்கட்டாயமாகப் பூசை செய்வதற்கு முற்பட்டுள்ளது. இந்தச் செயலை அந்த இடத்திலிருந்த கொலையுண்டவரின் தாய் தட்டிக்கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த குழுவினர் தாய் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாக மகன் அவர்களிடம் நியாயம் கேட்கச் சென்றுள்ளார். அங்கு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய நிலையில் அந்தக் குழுவினர் மறைத்து வைத்திருந்த கத்தியால் நிரோஜனைக் குத்தியுள்ளனர். படுகாயமடைந்த அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போதும், கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும், ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-110)

## 230 கிலோ...

மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட 102 கஞ்சாப் பொதிகள் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கஞ்சா கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (அ-எ-26-23)

## வனவள...

டாரகே சந்திர வன்சல கோசல விஜயசேகர என்ற வனவளத் திணைக்கள அதிகாரி கிளிநொச்சி, ஜெயபுரத்தில் இயங்கும் வட்டார வனவளத் திணைக்கள அலுவலகத்தில் கடமையாற்றுகின்றார். நேற்றுமுன்தினம் முதல் அவர் காணாமல் போயிருந்தார் என்று ஜெயபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். பொலிஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் அலுவலகத்துக்கு அருகில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் பதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் சடலத்தைப் பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜெயபுரம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-113-55)

**Freezer தேவை**

நல்ல நிலையில் உள்ள 150L இருந்து 500L வரை உள்ள Freezer தேவை.

தொடர்பு: 071 050 0444

**Vacancy for the Post of English Language Teacher-Upper School**

Applications are invited for the above Post of English Language Teacher. Candidates must

- have at least a Bachelors Degree from a recognized University
- be less than 35 years of age
- have at least two years of teaching experience.

Please send you CV (with two non-related referees )on or before Friday 12th June to:

The Principal,
Uduvil Girls' College.
Only short-listed candidates will be notified.

(cr.47649) N

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 09 . 1930

மறைவு 06 . 06 . 2026

### மூத்ததம்பி சரஸ்வதி

சுன்னாகம், கதிரமலை வீதியை வதிவிடமாக கொண்ட மூத்ததம்பி சரஸ்வதி அவர்கள் கடந்த (06.06.2026) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மூத்ததம்பி (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சற்குணதேவி, சஷ்டிவரதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சண்முகவரதன், சக்திவரதன் (ஜேர்மனி), சந்திரிக்கா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானேஸ்வரன், நிறஞ்சனி (பிரான்ஸ்), சுதர்சினி (ஜேர்மன்), அருளார் அகிலன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற கதிரேசபிள்ளை, முத்துகுமாரு, கனகமணி, சுப்பிரமணியம், ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் தங்கையும், காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் பாசமிகு அக்காவும், நிமல், அர்சிகா (குடும்பநல உத்தியோகத்தர்), அர்யுன் (துர்க்கா மோட்டோஸ்), அபியங்கா (தாதிய உத்தியோகத்தர்), கீர்த்தனன் - பிரகாஷிகா (பிரான்ஸ்), ஆரணி, அபர்ணா, அனித்தா, அக்சயன் (ஜேர்மனி), அபிராம் - கேதா (சுவிஸ்), அக்சயன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், சங்கேத், சாயிதக்சஷனா, ஹரிஸ்ஆகாஸ், ஆயுஷன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் இணுவில் கிழக்கு, பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

077 804 7597 (மகள்)

(CS/31954) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 10 . 1948

மறைவு 06 . 06 . 2026

### பத்மினிதேவி கந்தசாமி

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, மற்றும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மினிதேவி கந்தசாமி அவர்கள் நேற்று (06.06.2026) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - ஜெகசோதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சட்டத்தரணி சு.கந்தசாமி (J.P, U.M) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி நளினி சுபாகரன் (மாவட்ட நீதிபதி சாவகச்சேரி), ஜானகி, அகிலன், சுகந்தன், விமலன், ஜமுனா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபாகரன், சிவலக்ஷ்மன், துசித்தா, ஹேமினி, விக்னேஸ்வரி, சபேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், துளசிஹா, அனுக்ஷனா, அக்ஷரன், காருண்யா, சம்யுத்தா ஆகியோரின் அம்மம்மாவும், வைஷ்ணவி, கிருத்திக் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2026) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

இல. 35/10, 5ம் ஒழுங்கை, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

077 716 8777

(CS/31953) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

தேர்தலை நடத்துவதில் நிலவும் சட்டத் தடைகளைத் தாண்டுவதற்கான நான்கு முக்கியமான தெரிவுகளையும் திணைக் களம் பரிந்துரைத்துள்ளது என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள் ளார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவ தற்கு உகந்த தேர்தல் முறைமையைத் தேர்ந்தெடுத்து அறிக்கை சமர்ப்பிப்பதற் காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன் றத் தெரிவுக்குழுவின் தலைவர், அமைச் சர் விஜித ஹேரத் இது தொடர்பில் தெரி வித்துள்ளதாவது:-

தற்போது சட்டபூர்வ நிலைமை முழுமை யாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நாடா ளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான சிறந்த தெரிவு தொடர்பில் விரைவில் இறுதி முடிவு எட்டப்படும்.

சட்டபூர்வ நிலைமை சட்டமா அதிபர் திணைக்களத்தால் தெளிவுபடுத்தப்பட் டுள்ளது. இனி காலதாமதமின்றி தேர் தலை நடத்தும் வகையில், தகுந்த தேர் தல் முறைமை மற்றும் அதில் பெண்கள், இளைஞர் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு உள்வாங்குவது என்பது தொடர்பாகவே தெரிவுக்குழு இனி தீர்மானிக்க வேண் டும். மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத் தின் 3A(14) பிரிவின் கீழ், எல்லை நிர் ணய மறுஆய்வுக் குழு தனது அறிக்கை யைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கத் தவறியதே இந்தச் சட்டரீதி யான முடக்கத்துக்கு முதன்மைக் கார ணம் எனச் சட்டமா அதிபர் கடந்த வாரம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதாவது, 3A பிரிவின் கீழ் தேவையான சட்ட நடைமுறைகள் பூர்த்தி செய்யப்படா ததால், தற்போதுள்ள 2017ஆம் ஆண் டின் 17ஆம் இலக்க திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடி யாதுள்ளது. அதனால் அந்த மறுஆய் வுக் குழுவின் சட்டபூர்வமான அதிகாரக் காலமும் நடைமுறையில் முடிவுக்கு வந்துள்ளது.

இந்த விவகாரத்துக்கு வெறும் நிர்வாக நடவடிக்கை மூலமாகவோ அல்லது சட் டத்தை எளிமையாக விளக்குவதன் மூல மாகவோ தீர்வு காண முடியாது எனவும், நாடாளுமன்றத்தில் புதிய சட்டமொன்றை நிறைவேற்றுவதே இதற்கான ஒரே சட்ட பூர்வ வழிமுறை என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் அறுதியிட்டுக் கூறியுள் ளது.

இந்தச் சட்டச் சிக்கலைத் தீர்த்து தேர் தலை நோக்கி நகர்வதற்கு, தெரிவுக்குழு பரிசீலிக்கக்கூடிய நான்கு மாற்று வழி களை திணைக்களம் முன்வைத்துள் ளது.

▪2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாணசபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்கிவிட்டு, 1988ஆம் ஆண்டின் மூலச் சட்டத்தின் கீழ் இருந்த முந்தைய தேர்தல் முறைக்கு மீண்டும் திரும்புதல்.

▪2017ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் நீடிக்கின்ற போதிலும், முந்தைய தேர்தல் சட்டத்தை எதிர்காலத்தில் மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டுவருதல்.

▪2017 திருத்தச் சட்டத்தை முற்றாக நீக் கிவிட்டு, தேவைப்படின் பெண்கள் மற் றும் இளைஞர் பிரதிநிதித்துவத்திற்கான விசேட விதிகளுடன் கூடிய ஒரு புதிய தேர்தல் முறையை நாடாளுமன்றில் அறிமுகப்படுத்துதல்.

▪3A பிரிவின் கீழ் ஏற்கனவே எடுக்கப் பட்ட நடவடிக்கைகளை சட்டப்பூர்வ மாக்கி, எல்லை நிர்ணயச் செயல்மு றையை அதன் அடுத்த கட்டத்திலிருந்து மீண்டும் தொடங்குவதற்கு ஏதுவாகத் தற்போதைய சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல்

ஆகிய பரிந்துரைகளையே சட்டமா அதி பர் திணைக்களம் முன்வைத்துள் ளது.

2017ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டம் முழுமையாக நீக்கப்படும் பட்சத்தில், அதன் மூலம் உறுதி செய்யப் பட்டிருந்த அதிகரிக்கப்பட்ட பெண்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும் அபாயம் உள்ளதாகச் சட்டமா அதிபர் எச்சரித்துள்ளார். கொண்டுவரப்படும் புதிய சட்டத்தின் மூலம் இந்த அதிகரித்த பெண்கள் பிரதிநிதித்துவத்தைப் பாது காக்கவோ அல்லது மறுஅறிமுகம் செய் யவோ முடியும். அதேபோல், நாடாளு மன்றம் விரும்பினால் இளைஞர் பிரதிநி தித்துவத்தையும் புதிய சட்டத்தில் உள்ள டக்கலாம்.

இதேவேளை, பெண்கள் மற்றும் இளை ஞர் பிரதிநிதித்துவத்தை வெறும் நாடாளு மன்றப் பிரேரணை மூலம் கொண்டு வர முடியாது எனவும், அதற்கு முறையான சட்டத்திருத்தம் அல்லது நாடாளுமன்றத் தின் புதிய சட்டமூலம் அவசியமானது என்றும் சட்டமா அதிபர் தெளிவுபடுத்தி யுள்ளார்.

கடந்த ஜூன் 3ஆம் திகதியுடன் நாடாளு மன்றத் தெரிவுக்குழுவின் பதவிக் காலம் முடிவடைந்துள்ள நிலையில், ஜூன் 10ஆம் திகதி நடைபெறவுள்ள அடுத்த கூட்டத்தின் போது, இந்தப் பணிகளை நிறைவு செய்வதற்காகக் குழுவின் காலத்தை நீடிக்குமாறு கோரப்படவுள்ள து-என்றார்.

அதேவேளை, தேர்தல் நடத்த நிதி இல்லை என வெளியாகும் வதந்திகளை மறுத்த அமைச்சர், 2026ஆம் ஆண் டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற் குப் போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (அ-எ-44)

## ஐ.நா. ....

வதைத் தடுத்தல், வழிகாட்டல்களை வெளியிடல், முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகளை மேற்கொள்ளல் என்ப வற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டு 2007ஆம் ஆண்டு உருவாக் கப்பட்ட சித்திரவதைகளைத் தடுப்பதற் கான ஐக்கிய நாடுகள் உபகுழுவில் 25 சுயாதீன நிபுணர்கள் உள்ளடங்குகின்ற னர். நாட்டுக்கு வரும் பிரதிநிதிகள் எதிர் வரும் 24ஆம் திகதிவரை நாட்டில் தங்க வுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் விசேடமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ள ஐ.நா. உபகுழுவின் பிரதிநிதிகள், நாட ளாவிய ரீதியில் பல்வேறு வகைப்படுத் தல்களின்கீழ் இடம்பெறும் சித்திரவ தைகள், அவற்றைத் தடுப்பதற்கு முன் னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள், இந்தச் செயன்முறையில் பொலிஸார், சிவில் சமூக அமைப்புகள் உள்ளிட்ட ஏனைய பங்காளிகளின் வகிபாகம் என் பன தொடர்பில் பரந்துபட்ட கலந்துரை யாடல்களை முன்னெடுக்கவுள்ளனர்.

அதேவேளை சித்திரவதைகள் இடம்பெ றக்கூடிய சாத்தியப்பாடு உள்ள இடங்க ளுக்கும் அவர்கள் கண்காணிப்பு விஜயங்களை மேற்கொள்ளவுள்ளனர். அத்துடன் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான சந் திப்பொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது என்றும் அறியமுடிகின்றது. (அ-எ-இ)

## செம்மணி...

தின் 18ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று நடைபெற்றன. யாழ்ப்பாணம் நீதவான் எஸ். லெனின்குமார் முன்னி லையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்க லைக்கழகத் தொல்லியல் துறை மாண வர்கள், தடயவியல் பொலிஸார் உள் ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றனர். அகழ்வு நடவடிக்கைக ளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவித்த சட்டத்தரணி கைலாயநா தன், இன்றைய (நேற்றைய) அகழ்வில் சான்றுப் பொருள்கள் எவையும் அடை யாளம் காணப்படவில்லை. அகழ்வு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என்றார். செம்மணிப் புதைகுழி அகழ்வு நடவடிக்கையில் இதுவரை 302 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 298 மனித என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

## போக்குவரத்து...

கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று கொழும்பில் நடத்திய ஊடக சந் திப்பில் அவர் தெரிவித்ததாவது:-

நாளை (இன்று) திங்கட்கிழமை முதல் தனியார் பஸ் சேவைகள் ஒட்டுமொத்த மாக 50 சதவீதம் வரை குறைக்கப்படும். இந்த வாரம் முதல் பஸ் சேவைகளைக் கட்டுப்படுத்த நாங்கள் தீர்மானித்துள் ளோம். பஸ்களை இயக்குவதற்கு ஒரு மாத காலத்துக்குத் தற்காலிக நிவார ணத்தை நாம் கோரியிருந்தோம். ஆனால், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவோ அல்லது அமைச் சரோ அதற்குச் சாதகமான பதிலை வழங்கவில்லை.

வருடாந்த பஸ் கட்டணத் திருத்தம் ஜூலை மாதத்தின் முதல் வாரத்தில் நடைமு றைப்படுத்தப்பட வேண்டும். அதற்க மைய, திருத்தப்பட்ட கட்டணங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டபூர்வ அதிகாரமும் எங்களுக்கு உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர் பான கலந்துரையாடல்களை நடத்தியி ருந்தோம். இந்த மாத இறுதியில் டீசல் விலை மேலும் உயர்வடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இவற்றைக் கருத்தில் கொண்டே நாங் கள் கட்டணத் திருத்தத்தை நோக்கிச் செல்கிறோம். அனைத்துச்செலவுகளும் சுமார் 20 வீதம் முதல் 25 வீதம் வரை அதிகரித்துள்ளதால், இந்த வருடக் கட்ட ணத் திருத்தத்தைப் பொதுமக்கள் தாங் கிக்கொள்வது கடினமாக இருக்கும்.

நட்டத்தை எதிர்கொண்டு எம்மால் சேவை களை முன்னெடுத்துச் செல்ல முடியாது. சட்டக் கட்டமைப்பின் கீழ் டீசலுக்கான சில நிவாரணங்களை நாங்கள் கோரியி ருந்தோம். அது நடைமுறைப்படுத்தப்ப டவில்லை. எனவே, எங்களது தொழிற் சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

ஏற்கனவே சுமார் 25 சதவீதமான பஸ் கள் தன்னிச்சையாகச் சேவைகளிலி ருந்து விலகியுள்ளன. இந்த வாரம், பஸ் நேர அட்டவணைகளை மாற்றி, சேவை களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எங் களது போராட்டத்தைத் தீவிரப்படுத்து வோம். காலை வேளைகள், பாடசாலை கள் நிறைவடையும் நேரங்கள் மற்றும் மாலை நேர அலுவலகப் பணி நேரங் கள் போன்ற நெரிசலான நேரங்களில் மாத்திரமே அத்தியாவசிய சேவைகள் இயக்கப்படும்.

வழக்கமாக இயக்கப்படும் நான்கு பய ணங்களுக்குப் பதிலாக, அந்த நேர எல்லைகளில் மூன்று பயணங்கள் மாத் திரமே முன்னெடுக்கப்படும். ஒட்டுமொத் தமாகப் பேருந்து இயக்கங்கள் 50 வீத மாகக் குறைக்கப்படும். இதனால் ஏற்ப டும் அசௌகரியங்களுக்கு அரசாங் கமே பொறுப்பேற்க வேண்டும்-என்றார். (அ-எ-இ)

## மாயமான...

நேற்றுப் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ள னர். நேற்றுமுன்தினம் கடலுக்குச் சென்ற இவர்கள், அன்றைய தினம் மதி யத்துக்குப் பின்னர் காணாமல் போயி ருந்தனர். அவர்களின் கைபேசிகளும் செயலிழந்திருந்தன. அதனால் அவர்க ளைத் தேடும்பணி முடுக்கிவிடப்பட்டது. இது தொடர்பில் நேற்றுமுன்தினம் இரவு ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தி லும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்பின்னர் தேடும்பணியில் கடற்ப டையினரும் இணைக்கப்பட்டிருந்தனர். மீனவர்கள் பயணித்த படகின் எரிபொ ருள் தாங்கியில் ஏற்பட்ட கசிவு காரண மாக எரிபொருள் தீர்ந்த நிலையில், படகு கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு எழுவைதீவுக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது, மாதகல் பகுதி மீன வர்களால் மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட னர். கடற்படையினர் மூன்று மீனவர்க ளையும் அவர்கள் பயணித்த படகுடன் குறிகாட்டுவான் இறங்குதுறைக்குப் பாது காப்பாக அழைத்துவந்து உறவினர்களி டம் ஒப்படைத்தனர். மீனவர்கள் உறவி னர்களிடம் ஒப்படைக்கப்படும்போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனும் உடனிருந்தார். (அ-எ-66)


**காணி விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பிரதான வீதியில் 07 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு.
* யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதி முகப்புடன் மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட நிலையில் ஒருபரப்பின் விலை 1,200,000 பன்னிரெண்டு இலட்சம்.
* வீடுகள் அமைப்பதற்கும் வியாபார நிலையங்கள் அமைக்கவும் உகந்த நிலம்.
* யாழ். நகரில் இருந்து **4 Km** தூரம்.


**077 9886 389**
**076 077 2674**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

## கந்தையா சிவலிங்கம் (ராசா அண்ணை, மயூரா)

**(உரிமையாளர் - மயூரா லொறி)**



இளவாலை மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகவும் 3ம் கட்டையடி, கொக்குவில் மற்றும் மாரீசன்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவலிங்கம் (ராசா அண்ணா) அவர்கள் 05.06.2026 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா (மாரீசன்கூடல்) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - நாகரத்தினம் (அச்சுவேலி -வளலாய்) தம்பதியரின் மூத்த மருமகனும், தனலட்சுமியின் ஆருயிர்க்கணவரும், மயூரகாந்த் (கனடா), வத்சலா (நியூஸ்லாந்து), கமலகாந்த் (லண்டன்), சசிகாந்த், வனஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஸ்யந்தி, திவாகரன், நிறுத்யா, கோபிகா, லோகபிரசாத் ஆகியோரின் அன்பு மாமனாரும், கியான், கியாரா, ஜெய்விக்னா, திறீசன், அய்ஷன், ராகவி, ஹேஷிபர்வதி ஆகியோரின் பாசமிகு பேரனும், சிவசறோஜிதி, இரத்தினலீலா, சிவகுமார், ரேணுகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அச்சுவேலி வளலாயில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2026) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பின்னர் வளலாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 19.01.1953 **மறைவு** 05.06.2026


விமான நிலைய வீதி,
வளலாய், அச்சுவேலி.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 502 9211 (சசி)**

(CS/61609) N-1

# மரண அறிவித்தல்

## கணபதி இராஜகோபால்



வசாவிளான் மடத்தடியைப் பிறப்பிடமாகவும் லைடன் பாம் இராசவீதி கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி இராஜகோபால் 05.06.2026 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி பார்வதி - லக்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிட்டினர் - சீதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், மீனாச்சியம்மா, கதிரமலை, மகராசா, காலஞ்சென்ற வெள்ளிமலை மற்றும் லீலாவதி, கலைவாசன், பாக்கியவதி, தெய்வேந்திரம், தங்கரத்தினம், கெங்காதேவி, மனோன்மணி, மங்கையர்கரசி, அழகம்மா, அழகேந்திரம், மகாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜ்மோகன், இராஜ்நிகேதன், இராஜ்கபிலர், சர்மிளாவதி (செல்வி), சரச்சந்திரா, சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலக்சுமி, ஜெயனி, கலாநிதி, சிவதாஸ் (ஈசன்), கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திபிராஜ் மற்றும் ரஜீவன், திலக்சியா, நிலவன், விதுரஷன், லவேந்தரா, சதுஷியன், பிரதீனா, லதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மகேந்திரம், பசுபதி மற்றும் யோகேஸ்வரி, புஸ்பராணி, சிவசுப்பிரமணியம், நவமணி, பண்டிதர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2026) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம்** 26.12.1939 **மறைவு** 05.06.2026

லைடன் பாம் ஒழுங்கை,
இராசவீதி, கோப்பாய் மத்தி.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 986 4479**

(CS/61611) N-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.